(1968 / 1976)

4. பின்வரும் பழமொழியை பூர்த்தி செய்க.

குப்பையிற் கிடந்தாலும் ..... மங்காது.

5. தரப்படும் சொற்களில் வந்துள்ள உயிர்க்குறிகளை எழுதுக.

(i) நூதனசாலை .....

(ii) சுவாசம் .....

www.lkedu.lk

சுட்டெண் : .....

6. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

(i) நன்றி மன்னவா நன்றி

(ii) பெரியவர் அவர்கள் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை

7. கீழே தரப்படும் சொற்களுக்கு பொதுவாக தனிச்சொல்லை எழுதுக.

கொடை, பொன், காற்று, மேகம், காடை, கற்பகம் : .....

8. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

நண்பர்களும் / அவனது / கதை / கண்ணனும் / ஆர்வத்துடன் / கேட்டனர்

.....

9. தரப்படும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.

முகம் கொடுத்தல் : .....

10. தரப்படும் இணைமொழிச் சொற்களுல் ஒரே பொருளைத் தரும் இணைமொழிச் சொல்லை தெரிவு செய்து எழுதுக.

(மலையும் மடுவும் / இன்பதுன்பம் / அக்கம்பக்கம்): .....


11. தரப்படும் வாக்கியத்தின் இடைவெளியில் வரவேண்டிய இரட்டை கிளவிச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

தென்றல் ..... வென்று வீசியது. (கமகம / குளுகுளு)

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான எழுத்தை எழுதுக.

(i) Bisc....i....s (ii) Pha....ma....y

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில எழுத்துக்களிலே** எழுதுக.

(i)  .....

(ii)  .....

14. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

(i) Draw a rectangle .....

(ii) I love my country .....

15. (i)  இதன் சிங்களச் சொல்லை தமிழில் எழுதுக. .....

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

நீங்கள் எத்தனையாம் வகுப்பு படிக்கிறீர்கள்? .....


www.lkedu.lk

16. ஐம்பத்து நான்காயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஐந்து இவ் எண்ணில் இருந்து ஆறினைக் கழிக்கும் போது வரும் விடையை இலக்கங்களில் எழுதுக. : .....


17. 435, 405, 378, 584 வட்டத்தினுள் உள்ள எண்களில் 7 இனால் மிகுதியின்றி வகுபடக்கூடிய எண் யாது?

: .....

18. கீழே காட்டப்பட்டுள்ள வடிவங்களை பயன்படுத்தி ஆக்கத்தக்க திண்மங்கள் இரண்டும் யாவை?



(i) ..... (ii) .....

19. 

(i) இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணாக எழுதுக.

: .....

(ii) $\frac{3}{5}$, $\frac{1}{2}$, $\frac{2}{5}$, 0. 7, இவ்வெண்களில் மிகவும் பெரிய எண் யாது?

: .....

20. 772 மிட்டாய்கள் சம எண்ணிக்கையில் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. அதில் 3 பகுதிகள் விற்கப்பட்டன. எனின் அவர் விற்ற மிட்டாய்களின் எண்ணிக்கை யாது?

: .....

21. 448 புத்தகங்களில் 72 ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பொதியில் 4 வீதம் இருக்குமாறு சிறிய பொதிகளாக் பொதி செய்யப்பட்டன.

(i) சிறிய பொதிகளில் பொதி செய்யப்பட்ட புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

(ii) அத்தகைய எத்தனை சிறிய பொதிகளைத் தயார் செய்யலாம்?

: .....

22. ஒவ்வொன்றும் 35 cm நீளமுள்ள ஐந்து தகரத்துண்டுகள் ஒன்றின் மீது ஒன்றை வைத்து ஒரு தனித்துண்டாக ஒட்டப்பட்டது. ஒரு துண்டின் மீது மற்றொரு துண்டை வைத்து ஒட்டும் போது 10 cm ஐ ஒன்றன் மீது ஒன்று வைக்க நேரிட்டது. எனின் ஒட்டியதன் பின்பு கிடைக்கும் தகரத்துண்டின் நீளம் யாது?

: .....

23. 2 லீற்றர் 250 மில்லிலீற்றர் நீரை ஒன்பது குவளைகளில் சமமாக இடும் போது ஒரு குவளையில் உள்ள நீரின் கனவளவு யாது?


: .....

24. பி.ப 2.15 இற்கு தனது வீட்டில் இருந்து புறப்பட்ட மானசி பி.ப 3.40 இற்கு நூலகத்தை சென்றடைந்தாள். அவள் வீட்டில் இருந்து நூலகத்திற்கு செல்ல எடுத்த நேரத்தை நிமிடங்களில் தருக.

: .....

www.lkedu.lk

25. A, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள ஐந்து வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவ் வடிவங்களை சமச்சீராக பிரிப்பதற்கு புள்ளிக் கோடுகள் வரையப்பட்டுள்ளன. இதில் சமச்சீராக பிரிப்பதற்கு சரியாக வரையப்பட்டுள்ள உருக்களை காட்டும் சரியான எழுத்துக்களை தெரிவு செய்து எழுதுக.



: .....

26. ஆனந்தி குறித்தவொரு இடத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்து 100 m தூரம் கிழக்கு நோக்கி சென்றாள். அதன் பின்னர் அவள் அங்கிருந்து இடது கைப்பக்கம் திரும்பி 100 m தூரம் சென்றாள். அவள் ஆரம்ப இடத்தில் இருந்து தற்பொது எத்திசையில் இருக்கின்றாள்? : .....

27. குறித்தவொரு கடையில் 1 kg 500 g பருப்பு வாங்குவதற்கு வாதினி ரூபா 330 ஐ செலுத்த வேண்டி இருந்தது. அவள் கடைக்காரரிடம் ரூபா 1000 பணத்தாளை கொடுத்த போது மீதிப்பணமாக ஒரே வகையான ஆறு பணத்தாள்களும் ஒரே வகையான இரண்டு நாணயங்களும் வேறு ஒரு பணத்தாளும் கிடைத்தன.

(i) இக்கடையில் 1 kg பருப்பின் விலை எவ்வளவு ரூபா ஆகும்? : .....

(ii) வாதினிக்கு மீதிப்பணமாக கிடைத்த


அ. 7 காசுத்தாள்களின் மொத்தப் பெறுமதி ரூபாய்களில் எவ்வளவு? : .....

ஆ. 2 நாணயங்களின் மொத்தப் பெறுமதி ரூபாய்களில் எவ்வளவு? : .....

28. பெருக்கல் "*" எனும் குறியினாலும் கூட்டல் "▲" எனும் குறியினாலும் பிரித்தல் "#" எனும் குறியினாலும் குறிக்கப்படும். எனின் தரப்படும் கணிதச் செய்கையின் புள்ளிக்கோட்டில் வரவேண்டிய விடை யாது?

21 * 6 # 3 = ...

29. கீழுள்ள உருவில் உள்ள ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளம் 1 cm உம் அகலம் 1 cm உம் ஆகும். உருவில் நிழற்றப்பட்டுள்ள நான்கு வடிவங்கள் A, B, C, D எனப் பெயரிடப்பட்டுள்ளன.



(i) எழுத்து C இனால் காட்டப்படும் வடிவத்தின் சுற்றளவு யாது? : .....

(ii) பரப்பளவில் சமனான வடிவங்களுக்கு உரிய எழுத்துக்களை எழுதுக. : .....

(iii) எழுத்து B இனால் காட்டப்பட்டுள்ள உருவின் பரப்பளவு யாது? : .....

www.ikeduk

● **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவுசெய்து **அதன் கீழ் கோடிடுக.**

30. பின்வருவனவற்றுள் பூக்காத தாவரம் எது?
(1) நத்தார் மரம் (2) முல்லை (3) கித்துள் (4) செம்பருத்தி

31. இலைகளில் முட்களை கொண்ட தாவரம் எது?
(1) தொட்டாற்சுருங்கி (2) தூதுவளை (3) நாகதாளி (4) முள்முருங்கை

32. பின்வரும் எத்தாவரத்தின் வித்து முளைத்த பின்பும் வெளியில் வந்து உதிராமல் நீண்ட நாட்கள் இருக்கும்
(1) புளியை (2) பயறு (3) ஆமணக்கு (4) தென்னை

33. காலையில் கிழக்கு திசையிலும், மாலையில் மேற்கு திசையிலும் திரும்பி காணப்படும் பூ
(1) பவளமல்லிகை (2) தாமரை (3) நித்தியகல்யாணி (4) சூரியகாந்தி

34. பின்வரும் எத்தாவரத்தின் பழத்தை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் இட்டு சிறிது சீனியை சேர்த்ததும் கரைந்து நீர்த்தன்மையாக இருக்கும்?
(1) பலாப்பழம் (2) அன்னாசி (3) மாதுளை (4) கெக்கரி

35. பின்வரும் எவ் விலங்கு பொருளாதார ரீதியில் பயன்தரும் ஓர் உற்பத்தி பொருளை ஆக்குகின்றது
(1) வண்ணத்துப்பூச்சி (2) வெட்டுக்கிளி (3) சிலந்தி (4) பட்டுப்பூச்சி

36. தண்டுகளில் வித்துக்களை கொண்டுள்ள தாவரம்
(1) நாயுருவி (2) மரமுந்திரிகை (3) நெல்லி (4) விளா

37. உடலை நோய்களில் இருந்து பாதுகாக்கும் உணவு
(1) சோறு (2) பயறு (3) இறைச்சி (4) பப்பாசி

38. பின்வருவனவற்றுள் காந்தம் கவரும் பொருள்
(1) தங்க நாணயம் (2) அலுமினிய சட்டி (3) செப்புக்குடம் (4) இரும்பு வாளி

39. கூட்டு பசளை தயாரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய பின்வரும் இலைகளில் விரைவில் உக்கக் கூடியது
(1) பலா இலை (2) கிளிசரியா இலை (3) ஆலம் இலை (4) வம்மி இலை

40. தேசிய கீதத்தை பாடமுன் நாம் நிற்க வேண்டிய நிலை
(1) இலகுவாக நிற்றல் (2) கவனமாக நிற்றல் (3) ஒழுங்காக நிற்றல் (4) சிரசு தாழ்த்தி நிற்றல்

41. இலங்கை அரச இலட்சினையில் பூவிதழால் சூழப்பட்டு கையில் வாளுடன் சிங்கம் குறித்து நிற்பது
(1) ஒற்றுமையான நாட்டை
(2) கட்டுப்பாடான நாட்டு மக்களை
(3) நாட்டையும், கட்டுப்பாடான நாட்டு மக்களையும்
(4) ஒழுக்கமான மக்களை

42. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் இறுதி படிமுறை யாது?
(1) மலர்வு (2) மனதை தளர்த்துதல் (3) மனவுறுதி (4) பிராத்தனை

43. பின்வரும் எவ்வுணவு உண்ணும் போது சிலரது உடலில் தடிப்புக்களை உண்டாக்கும்
(1) பலாப்பழம் (2) மாம்பழம் (3) அன்னாசிப்பழம் (4) கொய்யாப்பழம்

www.ikeou.lk





44. தகவல்களை நாம் நேரடியாக பார்த்து அறியக் கூடியதாக தகவல்களை வழங்கும் ஊடகம் எது?
(1) வானொலி (2) பத்திரிகை (3) தொலைக்காட்சி (4) துண்டுப்பிரசுரம்

45. பின்வரும் எத்தாவரத்தின் பழத்தினை பாத்திரம் ஒன்றில் பிளிந்து எடுத்து நன்கு கலக்கியதன் பின்பு அதன் வித்துக்கள் மேலே மிதந்த காணப்படும்
(1) தோடை (2) கொய்யா (3) மாதுளை (4) பப்பாசி

46. வேலையை இலகுவாக்கும் பொறியையும் அப் பொறியுடன் தொடர்புபட்ட தொழிற்பாட்டையும் சரியாக காட்டும் விடையை தெரிவு செய்க.
(1) கைவண்டி - ஓடுதல் (2) கப்பி - இழுத்தல்
(3) பாக்குவெட்டி - கொத்துதல் (4) உளி - கூராக்குதல்

47. இலங்கையில் மண்ணரிப்பு ஏற்படுவதனால் அதிகம் பாதிக்கப்படும் மக்கள் வாழும் பிரதேசம் பின்வருவனவற்றுள் எது?
(1) தாழ்நில பிரதேச மக்கள் (2) வடக்கு மாகாண மக்கள்
(3) குருநாகல் மாவட்ட மக்கள் (4) மலைநாட்டு பிரதேச மக்கள்

48. இப் பொருளை திரும்பத் திரும்ப பயன்படுத்த முடியும் என்பதை காட்டுவதற்கு பயன்படுத்தும் உருவக்குறியீடு யாது?
(1)  (2)  (3)  (4) 

49. ஊசித்துளைக் கமராவை பயன்படுத்தி ஜன்னலின் ஊடாக வரும் ஒளிக்கதிர்களை திரையில் படும்படியாக பிடிக்கும் போது அது சரியாக தெரியும் உருவைத் தெரிவு செய்க.
(1)  (2)  (3)  (4) 

50. பாவித்து கழித்த ரின் மீன் பேணிகளை சூழலுக்கு நேயமான விதத்தில் அமைப்பதற்கு செய்ய வேண்டிய ஒரு செயல்
(1) வேலிக் கம்பிகளில் கொழுவி தொங்க விடல்
(2) வீடுகளின் கூரைகளின் மேலே வைத்தல்
(3) இடவசதி குறைவான இடங்களில் பயிர்களை நட்டு அழகுபார்த்தல்
(4) வெளிஇடங்களில் ஒழுங்காக அடுக்கி வைத்தல்

51. மிகவும் பிரதானமான மூன்று நிறங்களும் எவை?
(1) மஞ்சள், சிவப்பு, நீலம் (2) வெள்ளை, கறுப்பு, பச்சை
(3) மஞ்சள், நீலம், கபிலம் (4) நீலம், மஞ்சள், பச்சை

52. குழந்தை சற்று வளர்ந்ததும் தானாகவே நிமிர்ந்து இருக்கும் சந்தர்ப்பத்தில் பாடப்படும் நாட்டார் பாடல்
(1) தாலாட்டுப் பாடல் (2) சாய்ந்தாடம்மா
(3) கிட்டியடித்தல் (4) ஒப்பாரிப்பாடல்

www.ikedu.lk

53. அற்கலோல் தயாரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய கிழங்குவகை
(1) பீற்றூட் கிழங்கு (2) மரவள்ளிக் கிழங்கு
(3) பனங்கிழங்கு (4) இராசவள்ளிக் கிழங்கு

54. அந்திராக்ஸ், வாந்திபேதி ஆகிய நோய்களுக்குரிய மருந்தைக் கண்டுபிடித்தவர்
(1) மேரிகீயூரி அம்மையார் (2) அன்னை தெராசா
(3) லூயி பாஸ்டர் (4) சேர் ஐசாக் நியூட்டன்

55. ஒலிம்பிக் கொடியில் இல்லாத நிறம்
(1) கறுப்பு (2) நீலம் (3) மஞ்சள் (4)ஊதா

56. புத்த பெருமானின் புனித தந்தம் பாதுகாப்பாக வைக்கப்பட்டு பேணி பாதுகாக்கப்படும் நகரம் அமைந்துள்ள மாகாணம்
(1) ஊவா மாகாணம் (2) சப்பிரகமுவ மாகாணம்
(3) தென் மாகாணம் (4) மத்திய மாகாணம்

57. தலதா மாளிகையின் "தியவதன நிலமே" பதவியை வகித்தவர் யார்?
(1) கொங்காலே கொடபண்டா (2) மொனராவில கெப்பட்டிபொல திஸாவ
(3) வன. எஸ். மஹிந்த (4) சேர் டீ. பீ. ஜெயதிலக

58. இலங்கை நாணயத்தாள்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு உரிமை பெற்ற நிறுவனம்
(1) அலரி மாளிகை (2) ஜனாதிபதி மாளிகை
(3) இலங்கை மத்திய வங்கி (4) இலங்கை மக்கள் வங்கி

59.



மஞ்சள் நிறப்பின்னணியில் அமைந்துள்ள இவ் வீதிச் சமிஞ்கை குறியீடு குறித்து நிற்பது
(1) மந்தை அல்லது வேறு விலங்கு முன்னால் பாதையை கடக்கக்கூடும்
(2) மந்தைகள் முன்னால் பாதையை கடக்ககூடும்
(3) யானைகள் முன்னால் பாதையை கடக்ககூடும்
(4) பசுக்கள் முன்னால் பாதையை கடக்கக்கூடும்

60. நாம் ஒரு புதிய இடம், புதிய சூழல், புதிய மனிதர்களை சந்திக்கின்ற போது இயல்பாகவே எமக்கு ஒரு பயம் ஏற்படுவது இயல்பு, எமது நடத்தைகளில் சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. **"அந்த வகையில் நீர் பாடசாலைக் கல்வியை முறையாக தொடர்வதற்கு காலடி எடுத்து வைத்த முதல் நாளில் உமது மனதில் தோன்றிய எண்ணங்கள்"** எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

1. .....
.....
2. .....
.....
3. .....
.....

* * *

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2019

இறை நம்பிக்கையுள்ளவர்கள் நிழற்பிரதியாக்கம் செய்யமாட்டார்கள்]

ஞானவிளக்கு GNANAVILAKKU

5

MODEL EXAMINATION PAPER FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION AND FOR THE AWARD OF BURSARIES, AUGUST 2019

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - ஆகஸ்ட் 2019

வினாத்தாள் I

45 நிமிடம்

மாதிரி வினாத்தாள் - 10

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும்** உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.


விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	


	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	V/I/EMF
பிரதான் பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/CH

[பக்கம் 2 ஐப் பார்க்க

● **1, 2** ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உரு குறித்து நிற்கும் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.


1. 

(1) வெயில் (2) முள் (3) பாதுகாப்பு

2. 

(1) பாடசாலை (2) நூலகம் (3) அறிவு

● **3, 4** ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்படும் பொருட்களை பொருத்தமான ஒழுங்குமுறையில் கூட்டங்களாக்கும் போது வரும் விடை யாது?


3. 

A **B** **C** **D** **E** **F**

(1) A : D, E : B, C : F

(2) A : E, C : F, B : D

(3) E : B, A ; C, E : D

4. 


G **H** **I** **J** **K** **L**

(1) HJK, GIL

(2) GIK, HJL

(3) GHI, JKL

5. தரப்படும் நான்கு உருக்களுள் மூன்று உருக்கள் ஒத்த உருக்களாகும். அம்மூன்று உருக்களையும் தெரிவு செய்க.




A **B** **C** **D**

(1) A, B, C (2) B, C, D (3) A, B, D

www.lkedu.lk

சுட்டெண் : .....

6. தப்படும் ஐந்து உருக்களுள் மூன்று உருக்கள் ஏதோ ஒரு வகையில் ஒத்த உருக்களாகும். அதனைத் தெரிவு செய்க.



E **F** **G** **H** **I**

(1) E, G, I (2) E, F, H (3) E, I, H

● **7, 8** ஆகிய வினாக்களில் முதலில் தரப்படும் இரண்டு சொற்களின் தொடர்பை விளங்கிக் கொண்டு அதற்குப் பொருத்தமான சொற்சோடியை தெரிவு செய்க.

7. **பரீட்சை : பெறுபேறு** இதுபோன்று

(1) பசி : களைப்பு (2) பிரயாணம் : செலவு (3) விசாரணை : தீர்ப்பு

8. **428563 : 358642** இதுபோன்று

(1) 732584 : 253847 (2) 425368 : 835642 (3) 423587 : 682953

9. கற்றலில் ஆர்வம் குறைவாக இருந்த முகுந்தன் பரீட்சைகளில் குறைவான புள்ளிகளையே பெற்று வந்தான். இந்நிலையை உணர்ந்து கற்றலில் ஆர்வம் உள்ள முரளியுடன் சேர்ந்து கற்றதனால் பரீட்சைகளில் உயர்வனா புள்ளிகளை பெறலானான். இதற்கு பொருத்தமான தொடர் பின்வருவனவற்றுள் எது?

(1) பொன்மலர் மணம் பெற்றது போல
(2) பூவும் மணமும் போல
(3) பூவுடன் சேர்ந்த நாரும் மணம் வீசுதல் போல

● அட்டைகளில் உள்ள எழுத்துக்களை அவதானிக்கவும்.

திசும	ருவிகு	தகம	ரசுசி	டுதிவி	டுவித
A	**B**	**C**	**D**	**E**	**F**

10. இவ்வெழுத்துள்ள அட்டைகளில் உள்ள எழுத்துக்களை ஏதோ ஒருவகையில் ஒழுங்குபடுத்தும் போது கருத்துள்ள சொல்லை உருவாக்க முடியும். எனினும் இவ்வெழுத்து அட்டைகளில் ஒன்று கருத்துள்ள வகையில் சொல்லை உருவாக்காது. அவ் எழுத்தட்டைகளில் ஒன்று

(1) A, B, D ஆகிய எழுத்தட்டைகளில் ஒன்றாகும்
(2) B, E, F ஆகிய எழுத்தட்டைகளில் ஒன்றாகும்
(3) C, E, D ஆகிய எழுத்தட்டைகளில் ஒன்றாகும்

11. கருத்துள்ள சொல்லை உருவாக்கமுடியாத எழுத்தட்டையை நீக்கி விட்டு அதற்கு பதிலாக இடக்கூடியது.

(1) அட்டை A ஐ நீக்கி விட்டு | சுதகு | என இடமுடியும்

(2) அட்டை C ஐ நீக்கி விட்டு | கவுத | என இட முடியும்

(3) அட்டை D ஐ நீக்கி விட்டு | பதகு | என இட முடியும்


[பக். 4 ஐப் பார்க்க

www.ikedu.lk

12. கமலா மூன்று மாம்பழங்களையும் இரண்டு தோடம்பழங்களையும் அல்லது மூன்று தோடம்பழங்களை வாங்கக்கூடிய பணம் வைத்திருந்தாள். அவள் ஒரு தோடம்பழத்தை மட்டும் வாங்குவாள் ஆயின் அவள் எத்தனை மாம்பழத்தை வாங்கலாம்?

(1) 6 மாம்பழங்கள் (2) 5 மாம்பழங்கள் (3) 3 மாம்பழங்கள்

13.




உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கையும் சதுரங்களின் எண்ணிக்கையும் முறையே

(1) 8 முக்கோணங்களும் 6 சதுரங்களும்

(2) 7 முக்கோணங்களும் 6 சதுரங்களும்

(3) 10 முக்கோணங்களும் 6 சதுரங்கள்

14. ஆங்கில எழுத்துக்களின் கோலத்தை அவதானித்து புள்ளிக்கோடுள்ள வெற்றிடத்தில் வரவேண்டிய பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

● போட்டி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த மாணவர்களை ஐந்து அறைகளில் தங்கவைத்துள்ள விதம் ஆங்கில எழுத்துக்கள் மூலம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறையிலும் உள்ள மாணவர்களை கண்டுபிடிப்பதற்கு மாணவனின் பெயரானது நிலைக்குத்தாகவோ அல்லது கிடையாகவோ மீண்டும் தரப்படவில்லை. என்பதை கவனித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

1	2	3	4	5
T	M	M	W	Z
Z	W	Z	T	W
M	V	Z	Z	Z
T	V	W	M	M
W	Z	T	M	V
W	M	T	W	W

15. 1ம் இலக்க அறையிலும் 5ம் இலக்க அறையிலும் தங்கியுள்ள மாணவர் முறையே

(1) T, W (2) M, V (3) M, T


16. W, T ஆகிய மாணவர்கள் தங்கியிருக்கும் அறைகள் முறையே

(1) 4, 2 (2) 4, 3 (3) 3, 4


[பக். 5 ஐப் பார்க்க

www.ikeou.lk


17. செவ்வக வடிவ தாளொன்றை அடுத்தடுத்து மூன்று தடவைகள் அம்புக்குறி காட்டும் திசைவழியே மடிக்கும் போது எத்தனை ஒரே அளவான செவ்வகங்களை உருவாக்க முடியும்?



1வது மடிப்பு




2வது மடிப்பு




3வது மடிப்பு


(1) 16 (2) 8 (3) 10

18. கீழுள்ள உருவை மடித்து ஒட்டும்போது வரும் பொருத்தமான சதுரமுகியைத் தெரிவு செய்க.






(1)




(2)



(3)

19. பக்கமொன்று 4 cm அளவுகளைக் கொண்ட சதுரங்கள் ஐந்து ஒன்றோடொன்று ஒட்டப்பட்டுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. இதற்கேற்ப இவ்வுருவின் சுற்றளவு யாது?



(1) 100 cm (2) 64 cm (3) 76 cm


20. கடிகாரத்தின் நேரம் 6 மணியைக் காட்டும் போது நிமிடமுள் வடமேற்கு திசையில் அமைந்திருக்குமாயின் மணிமுள் எத்திசையில் அமைந்திருக்கும்?

(1) தென்மேற்கு திசை (2) தென்கிழக்கு திசை (3) வடகிழக்கு திசை


21. ஒரு மாதத்தின் 10 ஆவது நாள் புதன்கிழமைக்கு முந்தினநாள் வருகின்றது. அம்மாதத்தின் 2 ஆவது நாள் என்ன கிழமையில் வருகின்றது?

(1) செவ்வாய் (2) வியாழன் (3) திங்கள்


22. பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள செங்கோணங்களை விட குறைந்த கோணங்களின் எண்ணிக்கைகள் அதிகரிக்கும் ஒழுங்கிற்கேற்ப அவ்வுருக்களை வரிசைப்படுத்தும் போது வரும் விடையை தெரிவு செய்க.



A



B




C

(1) C, A, B (2) A, C, B (3) B, A, C


[பக். 6 ஐப் பார்க்க

www.lkedu.lk


23. எறும்பு ஒன்று அம்புக்குறிகள் மூலம் காட்டப்படும் பாதைகள் வழியே A யிலிருந்து B வரைக்கும் செல்வதற்கான மிகச் குறுகிய பாதையை காட்டும் உரு யாது?



(1)



(2)



(3)

24. விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றிய சில மாணவர்கள் தங்களுக்குள் கைகுலுக்கி கொண்ட போது அங்கு 15 கைகுலுக்கல்கள் இடம்பெற்றது. எனின் அவ்நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவர் எண்ணிக்கை எத்தனை?

(1) 8 மாணவர்கள் (2) 7 மாணவர்கள் (3) 6 மாணவர்கள்

25. மூன்று இலக்க மிகப் பெரிய எண்ணினதும் மூன்று இலக்க மிகச் சிறிய எண்ணினதும் கூட்டுத்தொகை யாது?

(1) 1098 (2) 1097 (3) 1099


26. தரப்படும் அட்டவணையில் உள்ளவர்களை உயரத்தின் அடிப்படையிலும், நிறையின் அடிப்படையிலும் ஏறுவரிசைப்படுத்தும் போது இரண்டிலும் ஒரே இடத்தில் காணப்படுபவர் யார்?

பெயர்	நிறை	உயரம்
மாதுரி	20kg 500g	80cm
மௌனி	31kg 150g	2m 20cm
மாதினி	20kg	250cm
மானசி	33kg 25g	2m


(1) மௌனி
(2) மானசி
(3) மாதினி

● **27, 28** ஆகிய வினாக்களில் தரப்படும் எண்கோலத்திற்கு ஏற்ப புள்ளிக்கோட்டில் வரவேண்டிய பொருத்தமான விடையை தெரிவு செய்க.


27.



(1) 5




(2) 4




(3) 2


28.



(1) 4



(2) 8



(3) 32

29. 1 தொடக்கம் 70 வரையுள்ள எண்களில் 7 இனால் மிகுதியின்றி வகுபடக்கூடிய இரட்டை எண்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 5 (2) 4 (3) 6

30. "அறிஞர்கள் எல்லோரும் படித்தவர்கள் அல்லர்" எனின்


(1) படித்தவர்கள் எல்லோரும் அறிஞர்கள்
(2) படிக்காதவர்களுள் அறிஞர்களும் உள்ளனர்
(3) படிக்காத அனைவரும் அறிஞர்கள் அல்லர்


www.ikedu.lk

31. தந்தை மற்றும் அவரது மகன் ஆகியோரின் வயதுகளின் கூட்டுத்தொகை 52 வருடங்களாகும். நான்கு வருடங்களுக்கு பின் தந்தையின் வயது மகனுடைய வயதைப் போல் மூன்று மடங்கு எனின் தந்தையின் தற்போதைய வயது எத்தனை?


(1) 45 வயது (2) 41 வயது (3) 60 வயது

32. இவ்வுருவை மேலிருந்து பார்க்கும் போது தெரியும் வடிவத்தை தெரிவு செய்க.






(1)



(2)




(3)

33. எனக்கு எனது சித்தப்பாவின் சித்தியின் மகள் என்ன உறவுமுறை?

(1) சித்தி (2) மாமி (3) அக்கா

34. தரப்படுவனவற்றை தளவாடியில் பார்க்கும் போது தெரியும் சரியான தோற்றத்தை தெரிவு செய்க.





(1)




(2)




(3)


35. படித்தவர்கள், ஆசிரியர்கள், கிரிகெட்டை விரும்புவர்கள் இவர்களின் தொடர்பினை காட்டும் பொருத்தமான வரிப்படத்தினை தெரிவு செய்க.



(1)



(2)



(3)

36. ஒரு குரங்கானது மணிக்கு 30 m ஏறி 20 m சறுக்கிறது. காலை 7 மணிக்கு ஏறத்தொடங்கினால் நிலத்தில் இருந்து 120 m உயரமான கம்பத்தின் உச்சியை அடைய எத்தனை மணியாகும்?


(1) பி.ப 3 மணி (2) பி.ப 4 மணி (3) பி.ப 5 மணி

37. ஒருவர் நடந்து செல்லும் போது அவரது நிழல் விழும் விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. அவர் எத்திசையில் இருந்து எத்திசையை நோக்கி செல்கின்றார்?



(1) வடக்கிலிருந்து தெற்கு (2) தெற்கிலிருந்து வடக்கு (3) மேற்கிலிருந்து கிழக்கு

- தாயக்கட்டை ஒன்றில் எவையேனும் எதிர்ப்பக்கச் சோடிகளில் காணப்படும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 7 ஆகும். அவ்வாறான நான்கு தாயக்கட்டைகளை ஒன்றாக சேர்த்து ஒட்டி கீழே தரப்பட்டுள்ள தொகுதி ஆக்கப்பட்டுள்ளது. ஒன்றையொன்று நோக்கும் வண்ணம் ஒட்டப்பட்டுள்ள பக்கச் சோடிகளில் காணப்படும் இலக்கங்களின் கூட்டுத்தொகை எட்டு ஆகும்.



38. பக்கம் A இல் காணப்படும் இலக்கம் யாது?
(1) 4 (2) 5 (3) 3

39. பக்கம் C இல் காணப்படும் இலக்கம் யாது?
(1) 4 (2) 5 (3) 6

40. பரீட்சை எழுதிய ஐந்து நண்பர்கள் மண்டபத்தில் இருந்து வெளியேறிய விதம் கீழே தரப்பட்டுள்ளது.

- மாலினி கமலினிக்கு பின் வெளியேறுகிறாள்.
- மதனா மாலினிக்கு பின்பாகவும் மாதவனுக்கு முன்பாகவும் வெளியேறுகிறாள்.
- மானசி மாதவனுக்கு பின்பாக வெளியேறுகிறாள்.

இவர்கள் வெளியேறிய ஒழுங்கை சரியாக காட்டும் விடையை தெரிவு செய்க.
(1) கமலினி, மாலினி, மதனா, மாதவன், மானசி
(2) கமலினி, மாலினி, மதனா, மானசி, மாதவன்
(3) கமலினி, மாலினி, மானசி, மாதவன், மதனா

* * *

www.kedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2019

இறை நம்பிக்கையுள்ளவர்கள் நிழற்பிரதியாக்கம் செய்யமாட்டீர்கள்]

ஞானவிளக்கு GNANAVILAKKU

5

MODEL EXAMINATION PAPER FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION AND FOR THE AWARD OF BURSARIES, AUGUST 2019

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - ஆகஸ்ட் 2019

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாதிரி வினாத்தாள் - 10

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	V/I/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/CH

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க

முன்பெல்லாம் சின்னஞ்சிறிய வயிற்றுக்கு உணவாகத் தானியங்களையும் தேடிச் செல்வேன். தனியாக இல்ல. கூட்டமாகப் பரந்த வயல் வெளிகள் எமது நிறத்தைப் போலவே. பசுமையாகக் காட்சியளிக்கும். கதிர் சுமந்த நெல்லினங்களும் எம்மைத் தலையசைத்து வரவேற்கும். பொன் நிறமாகக் காட்சிதரும் கதிர்களில் எதைச் சுவைப்பது எனத் தெரியாது அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கொரித்துத் திரிவோம். நாம் கூட்டமாகச் சென்று அட்டகாசம் புரிவதனால் மனிதர் எம்மைக் கண்டதும் விரட்டுவார்கள்.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடை தருக.

(i) நெல், வரகு, தினை, இறுங்கு போன்றவற்றை எவ்வாறு அழைப்பர்?

: .....

(ii) பல பறவைகள் சேர்ந்து செல்வதை எவ்வாறு அழைப்பர்?

: .....

(iii) இங்கு வந்துள்ள உவமானம் யாது?

: .....

(iv) சிறிய + சிறிய இதனை சேர்த்து எழுதும் போது வருவது?

: .....

(v) பந்தியில் வந்துள்ள இணைமொழிச்சொல் யாது?

: .....

(vi) பந்தியில் வந்துள்ள அ.ஃறிணை பன்மை வினைச் சொல் யாது?

: .....

2. சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லின் கீழ் கோடிடுக.

(i) ஆளுனர் / ஆளுநர்

(ii) செய்ந்நன்றி / செய்நன்றி

3. கீழே தரப்பட்ட வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(i) வழக்கில் குற்றஞ்சாட்டப்படுபவன் ..... (வாதி / பிரதிவாதி)

(ii) மீன்கள் கோடி கோடி சூழ வெண்ணிலாவே - ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே
இப்பாடல் எதனைப் பற்றிக் கூறுகிறது (சூரியன் / சந்திரன்)

4. கீழே தரப்படும் வாக்கியங்களில் வந்துள்ள எச்சம் எதுவென தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) கிளி பறந்து வந்தது. (பெயரெச்சம் / வினையெச்சம்) .....

(ii) முறிந்த மரம் விழுந்தது. (பெயரெச்சம் / வினையெச்சம்) .....


5. தரப்படும் பேச்சுவழக்குச் சொல்லை எழுத்துவழக்குச் சொல்லாக எழுதுக.

கோடாலி : .....

www.keju.lk

சுட்டெண் : .....

6. தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களை பூரணப்படுத்துக.



இடமிருந்து வலம்

1. சோறு என்பதன் ஒத்த சொல்

மேலிருந்து கீழ்

2. இளமை என்பதன் எதிர்ச் சொல்

7. தரப்படும் வாக்கியம் குறித்து நிற்கும் கருத்தைத் தரும் சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

பிறரது **சுகதுக்கங்களில்** நாம் பங்கு கொள்வது மனிதத்தன்மை ஆகும். **சுகதுக்கம்** என்பதற்கு இணையான இணைமொழி எது? (நன்மைதீமை / இன்பதுன்பம்)

8. தரப்படும் சொற்றொடரை பொருள் தரும் வகையில் திருத்தி வாக்கியமாக எழுதுக.

மண்ணால் ஆக்கப்பட்ட வீடு .....

9. தரப்படும் தனி வாக்கியங்களை தொடர் வாக்கியமாக எழுதுக.

- அரசன் திருடனைக் கண்டான்.
- திருடன் அரசனைக் கண்டான்.

.....

10. தரப்படும் வாக்கியங்களில் செயற்படுபொருள் இடம்பெற்றுள்ள வாக்கியத்தின் கீழ் கோடிடுக.

(i) அரசன் மாறுவேடத்தில் வந்தான்

(ii) கோழி தானியங்களை கொத்தியது

(iii) மாணவர்கள் பாடசாலைக்கு வந்தனர்

11. இடைவெளிகளில் வரவேண்டிய எழுத்துக்களை எழுதி வாக்கியத்தை பூரணப்படுத்துக.

நோயற்..... வாழ்வுக்கு ம.....க்க..... உணவே சி.....ந்தது.

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான எழுத்தை எழுதுக.

(i) Library .....

(ii) String hoppers .....

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

.....

(ii) 

.....

14. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.


(i) Shall We Start ..... (is / the) game?

(ii) I can ..... (come / gone) now?


www.ikeau.lk

15. (i) "மிரிஸ் பல" எனும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக. .....

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
நாங்கள் விளையாடப் போவோமா? .....

16. 

இந்த எண்சட்டத்தில் வகைகுறிக்கப்படும் எண்ணை எழுத்தில் எழுதுக.
: .....

17. 

இவ்வட்டத்தில் உள்ள நான்கு இலக்கங்களை பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணிலிருந்து மூன்றை கழிக்கும் போது வரும் எண் யாது?
: .....

18. எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்களை உரோம இலக்கங்களில் எழுதுக?


(i) பதினேழு ..... (ii) பத்தொன்பது .....

● கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி 19 ஆம் வினாவுக்கு விடை தருக.

15	18	40	25	42
		6		3
36	28	35	12	20


19. மேற்குறித்த எண்களைப் பயன்படுத்தி 6 இன் மடங்குகளை அட்டவணையில் ஒழுங்கு முறையில் எழுதுக.

ஆறின் மடங்குகள்					

20. 

(i) இவ்வுருவில் உள்ள வடிவத்தை சதுரமாக்குவதற்கு அதன் நீளப்பக்கத்தில் இருந்து எத்தனை cm ஐ கழிக்க வேண்டும்?
: .....

(ii) ஆரம்பத்தில் இருந்த செவ்வகத்தின் பரப்பளவு தயார் செய்த சதுரத்தின் பரப்பளவின் எத்தனை மடங்கு?
: .....

21. 

(i) இவ்வுருக்களை கொண்டு உருவாக்கக்கூடிய திண்ம உரு யாது? : .....

(ii) உருவாக்கிய திண்ம உருவில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை எத்தனை?
: .....

22. 2019 ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் தேவியின் வயது 10 ஆண்டுகளும் 8 மாதங்களும் ஆகும். மாதுரியின் வயது 12 ஆண்டுகளும் 5 மாதங்களும் ஆகும். எனின் தேவியை விட மாதுரி எத்தனை ஆண்டுகள் மாதங்களால் மூத்தவள் ஆவள்?

: .....ஆண்டுகள்.....மாதங்கள்

www.ikeu.lk


23. மாதவனின் மோட்டார் வாகனம் ஒரு லீற்றர் பெற்றோலில் 40 km தூரம் செல்லும். அவனது வாகனத்தில் 3 l 500 ml பெற்றோல் உள்ளது. அவன்-200 km தூரம் வாகனத்தை செலுத்துவதற்கு மேலும் நிரப்ப வேண்டிய பெற்றோலின் அளவை l, ml இல் தருக.

: .....லீற்றர்.....மில்லிலீற்றர்

24. ஒரு நூலகத்திற்கு வந்து அங்கு 3 மணித்தியாலம் 20 நிமிடங்களை செலவிட்ட வடிவேல் அங்கிருந்து பி.ப 3.00 இற்கு புறப்பட்டுச் சென்றான். வடிவேல் நூலகத்திற்கு வந்த நேரம் யாது?

: .....

25. உருவில் உள்ள காணித்துண்டின் சுற்றளவைக் காண்க.



: .....மீற்றர்.....சென்றிமீற்றர்


26. ஒரு காணியின் $\frac{1}{3}$ பங்கில் காய்கறி பயிர்களும் $\frac{2}{6}$ பங்கில் பூச்செடிகளும் நாட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள காணியில் நிலக்கடலை பயிரிடுவதற்காக விடப்பட்டுள்ளது. எனின் நிலக்கடலை பயிரிடுவதற்காக உள்ள காணியை பின்னமாகத் தருக. : .....

27. 10540 உடன் 810 ஐ கூட்டும்போது வரும் கூட்டுத் தொகை யாது? : .....

28. ஒரு பூரணமற்ற சிட்டை கீழே காணப்படுகிறது. அதில் உள்ள மூன்று வெற்றிடங்களையும் நிரப்புக.

பொருள்	எண்ணிக்கை	ஒன்றின் விலை		பணம்	
		ரூபா	சதம்	ரூபா	சதம்
பயிற்சிப் புத்தகங்கள்	8	80	00	640	00
பென்சில்	5	.....	00	90	00
பேனை	.....	19	00	133	00
அடிமட்டம்	3	15	00	45	00
			மொத்தப் பணம்	.....	00

29.



(i) புத்தளத்தில் இருந்து நொச்சியாகம வரையுள்ள தூரம் எத்தனை km?

: .....

(ii) மஹாவெவயில் இருந்து புத்தளம் வரையுள்ள தூரம் எத்தனை km?

: .....

(iii) சிலாபத்தில் இருந்து அனுராதபுரம் வரையுள்ள தூரம் எத்தனை km?

: .....

www.lkedu.lk

● **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவுசெய்து **அதன் கீழ் கோடிடுக.**

30. பூவில் இருந்து வித்தும் காயும் உருவாகி பின்பு பழமாகும் தாவரம் யாது?
(1) கொடித்தோடை (2) மரமுந்திரிகை (3) அன்னாசி (4) பலா

31. இரவு வேளையில் இலைகள் சுருங்கும் தாவரம்
(1) புளியை (2) முருங்கை (3) வம்மி (4) ஆலை

32. இலைகளின் கீழும் தண்டுகளிலும் முட்களைக் கொண்டு காணப்படும் தாவரம்
(1) தோடை (2) முள்முருங்கை (3) கண்டங்கத்தரி (4) எலுமிச்சை

33. கறிக்கு சுவையூட்ட உதவும் பட்டை
(1) இஞ்சி (2) மஞ்சள் (3) கறிவேப்பிலை (4) கறுவா

34. நடுகைக்காக வித்து ஒன்றை தெரிவு செய்யும் போது பொருத்தமற்றதாக இருப்பது?
(1) நன்கு முதிர்ச்சியடைந்திருத்தல்
(2) பழுதுகள் இல்லாது இருத்தல்
(3) பூச்சிகளின் தாக்கத்திற்கு உட்படாததாக இருத்தல்
(4) வெளியுறை கறைப்புள்ளிகளோடு பிரகாசமின்றி இருத்தல்

35. நெற்பயிரில் தாக்கத்தை உண்டுபண்ணும் பூச்சி
(1) பனிப்பூச்சி (2) மீலி முட்டைப் பூச்சி
(3) வெட்டுக்கிளி (4) கும்பிடுதட்டான்

36. அழகுக்காக வைக்கப்படும் பூச்செண்டுகளில் பூக்கள் இலைகள் அதிக நாட்கள் வாடாமல் இருப்பதற்கு செய்யக்கூடியது
(1) தினமும் நீரை மாற்றாது பேணுதல்
(2) நீரில் சிறிதளவு யூரியா பசளை இடுதல்
(3) பூக்கள் இடப்பட்டுள்ள நீரில் $\frac{1}{4}$ பங்கு பனடோல் வில்லை இடுதல்
(4) பூக்காம்பின் கீழ் முனையின் சிறிய பகுதியை வெட்டி அகற்றுதல்.

37. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்களை கொண்ட கூட்டம்
(1) மரமுந்திரிகை, நாயுருவி, ஆடையொட்டி, புலிநகம்
(2) துத்திரிப்புல், எண்ணெய், அச்சி, வேங்கை
(3) சீதேவியார் செங்கழுநீர், மகோகனி, எண்ணெய், பருத்தி
(4) பொன்னவரை, இறப்பர், காசித்தும்பை, ஆடையொட்டி


38. இலங்கை நாட்டுக்குரிய முலையூட்டும் பிராணி
(1) புலி (2) யானை (3) சுண்டெலி (4) நரி

39. பின்வரும் எவ்விலங்கு அமைக்கும் வீட்டில் பாம்பு, உடும்பு போன்றவை வாழும்
(1) கிளி (2) தூக்கணம்குருவி (3) கறையான் (4) குளவி

40. மூக்கணாம் கயிறு பயன்படுத்தும் விலங்கு
(1) எருது (2) யானை (3) குதிரை (4) கழுதை

41. மரம் அரியும் சிறிய கைவாளை கூராக்குவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்
(1) எண்ணைக் கல் (2) உளி (3) அரம் (4) திருகாணி செலுத்தி

42.



சில நாடுகள் அமைந்தள்ள இடம் காட்டப்பட்டுள்ளது. இதற்கேற்ப வட்டம் இருக்கும் இடத்தில் வரக்கூடிய நாடு எதுவாக இருக்கும்?

(1) தாய்லாந்து
(2) பாகிஸ்தான்
(3) பங்களாதேஷ்
(4) இலங்கை

43. முதலாம் நாள் தொடக்கம் 15ம் நாள் வரையில் சந்திரனின் வடிவத்திற்கு ஏற்படும் மாற்றத்தை எவ்வாறு அழைப்பர்?

(1) தேய் பிறை (2) வளர்பிறை (3) பூரணை (4) அமாவாசை

44. பின்வரும் எப்பறவை மூலம் வானிலை எதிர்வுகூறலை அறிய முடியும்

(1) காட்டுக்கோழி கூவுதல் (2) ஆட்காட்டி குருவி தாழப்பறத்தல்
(3) ஊர்க்குருவி மேலே பறத்தல் (4) குயில் கூவுதல்

45. பின்வருவனவற்றுள் காற்றாலையை பயன்படுத்தி செய்யக்கூடிய வேலை

(1) உப்பளங்களில் உவர்நீரை பாத்திகளுக்கு செலுத்துதல்
(2) மோட்டார் வாகனத்திற்கு வர்ணப்பூச்சு பூசுதல்
(3) சைக்கிள் டயருக்கு காற்று நிரப்புதல்
(4) வாகனத்தை சுத்தப்படுத்துதல்

46. அங்கிகரீக்கப்பட்ட தரமான பண்டம் என்பதற்கு வழங்கப்பட்டுள்ள சர்வதேச சான்றிதழ்

(1) SLS (2) ISO (3) SOS (4) ISBN

47. பின்வரும் எந்த விலங்கு மனிதர்களை கடிப்பதால் அவருக்கு விசர்நாய்க்கடி நோய் ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது?

(1) நரி (2) குதிரை (3) கரடி (4) கழுதை

48. நாம் சோறு தினமும் உண்பதால் எமக்கு ஏற்படக்கூடிய பயன்

(1) உடலை வளர்க்கும் (2) நோய்களில் இருந்து பாதுகாக்கும்
(3) உடலுக்கு சக்தியை தரும் (4) பல், எலும்புகள் வளர்ச்சியடையும்

49. களிமண்ணை கொண்டு வந்து வீடு அமைத்து வாழும் பிராணி

(1) தேனீ (2) கறையான் (3) தூக்கணாங்குருவி (4) குளவி

50. பாம்பு தீண்டிய ஒருவருக்கு செய்யக்கூடிய முதலுதவி

(1) கைமருந்து இடுதல்
(2) கடிவாயில் வாயை வைத்து உறிஞ்சுதல்
(3) கடிவாயை துணியினால் இறுக்கிக்கட்டுதல்
(4) காயத்தை சவர்காரமிட்டு சுத்தமான நீரினால் கழுவுதல்

51. குறித்தவொரு இடத்தில் நிலையாக நடுவதற்கு பின்வரும் எப் பழவகைத் தாவரங்களை ஒட்டியதன் பின்பு நட முடியும்

(1) மா, கொய்யா (2) தக்காளி, கத்தரி
(3) மா, சப்பதில்லா (4) கொடித்தோடை, எலுமிச்சை

52. தாவர வித்துகளை பயன்படுத்தி செய்யப்படும் அலங்கார வடிவத்தை எவ்வாறு அழைப்பர்

(1) கொலாஜ் (2) காட்டுருக்கோலம் (3) அல்பனா (4) கிறபிக்

www.lkedu.lk

53. கடல் மீன் உண்பதால் எமக்கு அதிகம் கிடைக்கக்கூடிய போசாக்குப் பதார்த்தம்
(1) கல்சியம் (2) அயடீன் (3) இரும்பு (4) புரதம்


54. இலைக் கஞ்சி ஒன்றை தயாரிக்கும் போது நாம் செய்ய தேவையற்றது
(1) போசணைத் தரமுடைய அரிசி வகை ஒன்றை தெரிவு செய்தல்
(2) சுத்தம் செய்த இலைகளை நன்கு இடித்தல்
(3) கஞ்சியை அதிக நேரம் வேகவைக்காது பச்சைநிறம் மாறாத வகையில் தயார் செய்தல்
(4) பச்சை காய்கறிகளை சிறு துண்டுகளாக வெட்டி இடுதல்

55. உப்பு இட்டு வெயிலில் உலர வைப்பதன் மூலம் பேணிபாதுகாக்கக் கூடிய சரியான கூட்டம்
(1) தோடம்பழம், பலாக்காய், மீன் (2) எலுமிச்சம்பழம், மீன், மாங்காய்
(3) பனங்கிழங்கு, பனம்பழம், ஈரப்பலாக்காய் (4) மீன், எலுமிச்சை, பலாக்காய்

56. இலங்கையின் தேசப்படத்தில் மலைகளை குறித்துக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நியம நிறம்
(1) மஞ்சள் (2) சிவப்பு (3) பச்சை (4) கபிலம்

57. பண்டுகாபய மன்னனால் கட்டப்பட்ட குளங்கள்
(1) அபயவாவி, காமினிவாவி (2) பசவக்குளம், மின்னேரியாக் குளம்
(3) கலாவாவி, திஸ்ஸவாவி (4) சேனநாயக்க சமுத்திரம், பராக்கிரம சமுத்திரம்

58. களுகங்கை கடலுடன் கலக்கும் மாவட்டம்
(1) காலி (2) மாத்தறை (3) களுத்துறை (4) அம்பாந்தோட்டை

59. 

மஞ்சள் நிறப் பின்னணியில் அமைந்துள்ள இவ் வீதிச்சமிஞ்கை குறியீடானது முன்னால் ஒளிச் சமிஞ்கைகள் என்பதை வாகன சாரதிகளுக்கு தெளிவுபடுத்துவதற்காக உள்ளது. இச்சமிஞ்கையில் மேலுள்ள வட்டம் குறித்துநிற்கும் நிறம்
(1) பச்சை (2) மஞ்சள்
(3) சிவப்பு (4) நீலம்

60. முரளி வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தான். வீதியோரம் ஓர் மர்ம பொதியொன்றை கண்டான். அதனைக் கண்ட முரளி சுற்றுமுற்றும் பார்த்தான்..... இச்சம்பவத்தின் மீதிப்பகுதியை நிறைவு செய்வதற்கு பொருத்தமான மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

1. .....
.....

2. .....
.....

3. .....
.....

* * *

www.kedu.lk